**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 452/2025</u>**

**<u>வழக்கு சாட்சி PW-6</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராஜா | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மருதையா | தொழில் | : | லோடு மேன் |
| கிராமம் | : | புளியங்குடி | வயது | : | 50 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் புளியங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் லோடு மேனாக வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 11 வருடங்களுக்கு ஊரில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.2** ஆகும். அத்தாட்சியில் உள்ள முதலாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.3** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 22.06.2016ம் தேதி, காலை 09.00 மணிக்கு புளியங்குடி ஊருக்கு மேற்கேயுள்ள பாய்ஸ் ஹாஸ்டல்

பக்கம் எதிரிகள் முகமது அப்துல்காரிப், காதர்மைதீன், சேட் என்ற லியாத்அலி ஆகியோர்களை கைது செய்து என் முன்பும், குமார் முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி அப்துல் காரிப் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 18.30 மணிக்கு புளியங்குடி வெள்ளூரணி வடக்கு பக்கம் எதிரி எடுத்து ஆஜர் செய்த 3 கம்புகள், ஒரு கம்பி ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், குமார் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:31:54 +0530

<u>**வாக்குமூலம்**</u>

<u>**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**</u>

<u>**வழக்கு எண் : SC.No. 452/2025**</u>

<u>**வழக்கு சாட்சி PW-7**</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | கூலி |
| கிராமம் | : | புளியங்குடி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Thursday of 12.03.2026.

**(2ம் எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. இதர எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

<u>**முதல் விசாரணை :**</u>

நான் புளியங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்துக்கள் என்னுடையது தான். சுமார் 11 வருடங்களுக்கு முன்பு காவல்நிலையத்தில் வைத்து போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்த கையெழுத்துக்களை போட்டு கொடுத்தேன். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்று எனக்கு தெரியாது. ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.4** ஆகும். அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.5** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 22.06.2016ம் தேதி, காலை 09.00 மணிக்கு புளியங்குடி ஊருக்கு மேற்கேயுள்ள பாய்ஸ் ஹாஸ்டல் பக்கம் எதிரிகள் முகமது அப்துல்காரிப், காதர்மைதீன், சேட் என்ற லியாத்அலி ஆகியோர்களை கைது செய்து என் முன்பும், ராஜா முன்பும் கைது செய்து விசாரித்தபோது எதிரி அப்துல் காரிப் தானாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 18.30 மணிக்கு புளியங்குடி வெள்ளூரணி வடக்கு பக்கம் எதிரி எடுத்து ஆஜர் செய்த 3 கம்புகள், ஒரு கம்பி ஆகியவற்றை போலீசார் அத்தாட்சியில் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. மேற்படி ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் நானும், ராஜா என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது அதற்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.13 18:32:01 +0530